சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

Case No.OS. 186/2018

2022-ம் ஆண்டு ஜுலை மாதம் 19 நாள் செவ்வாய்கிழமை

வாதி தரப்பு சாட்சியாகிய வா.சா.1-இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திருமதி.லதா, தலைமை எழுத்தர் என்பவரால் பிரமாணம் செய்யப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுரேஷ் | தொழில் | |
| தந்தை/கணவர் பெயர் | பெருமாள் | ஜாதி | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | ஆரணி | வயது | |

**19.07.2022 முதல் விசாரணை**

நான் மேற்கண்ட வழக்கில் வாதி ஆவேன். பிரதிவாதிகளுக்கெதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு பற்றிய முழு விவரம் எனக்குத் தெரியும். என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைதான். என்தரப்பு சான்றாவணங்களாக 11.06.2010 தேதியிட்ட அசல் அடமானக்கடன் பத்திரம் வா.சா.ஆ.1 (பிரதிவாதித் தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது) 02.01.2018 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு நகல் வா.சா.ஆ.2, அஞ்சலக ஒப்புகை அட்டைகள் வா.சா.ஆ.3,4,5, 09.01.2018 தேதியிட்ட பதில் அறிவிப்பு வா.சா.ஆ.6, 22.01.2018 தேதியிட்ட அடமான மேடோவர் பத்திரம் வா.சா.ஆ.7, (பிரதிவாதித்தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது) 16.04.2018 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு நகல் வா.சா.ஆ.8, அஞ்சலக ஒப்புகை அட்டைகள் வா.சா. ஆ.9,10,11,12, 10.04.2018 தேதியிட்ட வில்லங்க சான்று வா.சா.ஆ.13, 08.07.2018 தேதியிட்ட பதிவிறக்கம் செய்யப்பட்ட வில்லங்க சான்று வா.சா.ஆ.14 தாக்கல் செய்கிறேன். தாவாப்படி தீர்ப்பளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.